பக்கங்கள்
12

விலை
ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

திங்கட்கிழமை 11 செப்ரெம்பர் 2023 | ஆவணி 25 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## தொல்லியல் திணைக்களத்தால்

# இலங்கையில் இனப்பதற்றம்

### அரசாங்கத்தை சாடுகின்றது ஐ.நா.

### ஜெனிவா அமர்வு இன்று ஆரம்பம்

**கொழும்பு, செப்ரெம்பர் 11**

**நல்லிணக்கம் தொடர்பாக ஜனாதிபதி புதிய தொனியில் கதைக்கத் தொடங்கியுள்ளார். ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தொல்லியல் திணைக்களத்தால் காணிகள் கடுமையாக ஆக்கிர மிக்கப்படுகின்றன. இது இனங்களுக்கு இடையே பதற்றத்தை ஏற்படுத்துகின்றது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தெரிவித்துள்ளார்.** »11




## மைத்திரிக்கு கதவடைப்பு!

கொழும்பு, செப். 11
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவை தமது கூட்டணியில் இணைத்துக்கொள்ளாதி ருக்க பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக் கள் சக்தி தீர்மானித் »11

## மொராக்கோ நிலநடுக்கத்தில் 2,300 பேர் பலி!

ரபட், செப். 11
ஆபிரிக்க நாடான மொராக்கோவில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத் தில் சுமார் 2 ஆயிரத்து 300 பேர் உயிரி ழந்தனர்.
மொராக்கோவின் சுற்றுலா நகரமும், வர்த்தக நகரமுமாக »12



## விபத்தில் மூதாட்டி இறப்பு!

யாழ்ப்பாணம், செப். 11
விபத்தில் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச் சைக்காகச் சேர்க்கப்பட்ட மூதாட்டி சிகிச்சை பய னின்றி நேற்று உயிரிழந் தார். இரத்தினசாமி நித்திய செல்வம் (வயது - 74) என்ற மூதாட்டியே உயி ரிழந்தவராவார். »11

## 'சனல்-4' வீடியோ தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து

கொழும்பு, செப். 11
ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் இலங்கையில் இதுவரை மேற் கொள்ளப்பட்ட விசாரணை கள் வெற்றியடையவில்லை. 'சனல்-4' வெளிக்கொணர்வு தொடர்பில்சர்வதேசவிசாரணை கள் நடத்தப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன »11

## புதிய கட்சியை தொடங்குவேன்!

### தயாசிறி மிரட்டல் தொனி

கொழும்பு, செப். 11
சுதந்திரக் கட்சி என்னைத் தொடர்ச்சியாக நிராக ரிக்கும் பட்சத்தில் புதியதொரு அரசியல் கட்சியை ஆரம்பிப்பேன் என்று சுதந்திரக் »11

## கோப்பாயில் கோர விபத்து; நபரொருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப். 11
யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தின்போது சம்பவ இடத்தில் ஒருவர் உயிரிழந்தார். 47 வயது மதிக்கத்தக்க நபரே உயிரிழந்தவராவார் என்று பொலி ஸார் தெரிவித்தனர். »12

### பேருந்து மீது சரமாரியான தாக்குதல்

### மக்கள் ஆவேசமடைந்ததால் பதற்றம்




## பாலம் அமைந்தால் இலாபம் கொட்டும்!

### மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 11
இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாலம் அமைக்கப்படுவது வரவேற்கத்தக்க விடயம். இதன் மூலம் இருநாடுகளுக்கும் பெருமளவு வணிக இலாபங்கள் கிட்டும் என்று இலங்கை மத்திய »11

## போதைப்பாக்கு, சாராயத்துடன் ஆலயத்துக்கு வந்த ஐயர்

**மக்களால் விரட்டியடிப்பு** | **வவுனியாவில் சம்பவம்**

வவுனியா, செப். 11
வவுனியாவில் ஆலயம் ஒன்றின் மஹோற்சவத்தின்போது, மதுபோதையில் போதைப்பாக்கு மற்றும் சாரா யப் போத்தலுடன் ஆலயத்துக்கு வந்த குருக்கள், »11

### கிளி. தருமபுரம் மத்திய கல்லூரியில்

## திடீரென பற்றிய தீ; மரங்கள் எரிந்தழிவு

கிளிநொச்சி, செப். 11
கிளிநொச்சி தருமபுரம் மத் திய கல்லூரியின் பின் வளாகத்தில் நின்ற »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இரத்தக்கறை இல்லையெனில் உண்மையை வெளிப்படுத்துக

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, செப்.11

**கைகளில் இரத்தக்கறை இல்லை என்றால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்துங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் உண்மைத் தன்மை தொடர்பாக நாட்டின் பெரும்பான்மை யான மக்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளது. பாரபட்சமின்றி நடுநிலையான விசாரணையின் மூலம் கத்தோலிக்க சமூகத்துக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

பிரதான சூத்திரதாரியாக இருப்பவர்கள் யார்? திட்டமிட்டது யார்? பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார்? இது தீவிரவாதத் திட்டமா? இதில் அரசியல் நோக்கங்கள் இருந்ததா என்பவையும் விசாரிக்கப்பட வேண்டும். உண்மையை வெளிப்படுத்தத் தயங்கக்கூடாது - என்றார். (எ-இ)

# பாலியல் குற்றச்சாட்டு ஒருவர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், செப். 11

உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நபர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

காரைநகரைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் குறித்தநபரை கடந்த மூன்றாம் திகதி ஊர்காவற்றுறை பொலிஸார் கைதுசெய்ய சென்றிருந்தனர். இதன்போது சந்தேகநபர் உயிர்மாய்க்க முயற்சித்த நிலையில் காப்பாற்றப்பட்டு காரைநகர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் அவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-23)

# உ.கிழங்கு வரி 4 மாதம் நீடிப்பு



இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை பொருள்களுக்கான விசேட வரியை மேலும் 4 மாத காலத்துக்கு நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கு இந்த வருட மார்ச் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு கிலோ 50 ரூபா விற்பனைப் பொருள்களுக்கான விசேட வரி நிதியமைச்சால் விதிக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த நடைமுறை எதிர்வரும் 4 மாதக் காலப் பகுதிக்கு இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)





# 'வழிதோறும் குளங்கள்' நடைபயணம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 11

வழிதோறும் உள்ள குளங்கள் காணும் பயணமொன்று 'நடந்தாய் வாழி வழுக்கை ஆறு' எனும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தெல்லிப்பழையிலிருந்து ஆரம்பமான இந்தப் பயணம் அராலியைச் சென்றடையவுள்ளது.

இதன்போது குளங்களின் முக்கியத்துவம், நீரை சேமித்தல் உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இந்தப் பயணத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமார், சுவீடன் விவசாயப் பல்கலைக்கழக தகைநிலை பேராசிரியர் சிறீஸ்கந்தராசா உள்ளிட்டவர்கள் பங்கேற்றுள்ளனர். (ச-27)

# வடமராட்சியில் கசிப்பு கோட்டை; முறியடித்தனர் பொலிஸார்!

## 600 லீற்றர் கசிப்பு மீட்பு சந்தேகநபரொருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு - வத்திராயனில் கசிப்புக் காய்ச்சும் இடம் முற்றுகையிடப்பட்டு சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மருதங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

கசிப்புக் காய்ச்சப்பட்டு விற்பனை இடம்பெறுகின்றது எனக் கிடைத்த தவலுக்கமைய பொலிஸாரால் குறித்த இடம் கடந்த வெள்ளிக்கிழமை சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது சுமார் 600 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படும் பரல், கோடா என்பன மீட்கப்பட்டன.

கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் அரசியல்கட்சியொன்றின் முக்கியஸ்தர் எனத் தெரியவந்துள்ளதாகவும் சந்தேகநபரை சட்ட நடவடிக்கைக்குட்படுத்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-27)

# ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தை வைத்து தெற்கில் அரசியல்!

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, செப்.11

தமிழ் இனப்படுகொலை தொடர்பாக குரல்கொடுக்காத எதிர்க்கட்சித்தலைவர், கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் ஏனையவர்கள் உயிர்த்த ஞாயிறு சம்பவத்தை வைத்துக்கொண்டு அரசியல் நடத்துவது உண்மையிலே கேவலமான விடயமாகும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:- உயிர்த்த ஞாயிறுத் தொடர்பாக 'சனல்- 4' வெளியிட்ட தகவலானது பரபரப்பாக பேசப்பட்டு வருகின்றது.

தென்னிலங்கையில் உள்ளவர்களும், கர்தினாலும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டும் என்ற கோரிக்கையை வைக்கின்றனர்.

நாங்களும் இதுதொடர்பாக சர்வதேச விசாரணை மற்றும் சர்வதேச நீதிமன்றத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டுசெல்ல வேண்டும் என்று சொல்வதுடன், விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிறுத்தியே இந்த விடயமானது தற்போது பேசுபொருளாக இருப்பதாகவே நான் கருதுகிறேன். கர்தினால் உட்பட அனைவரும் மனச்சாட்சியுடன் இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என எண்ணி இருந்திருந்தால், கடந்த காலங்களிலே மஹிந்த ராஜபக்சவின் குடும்பம் மேற்கொண்ட அட்டூழியங்கள், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல்கொடுத்திருக்கலாம் - என்றார். (எ-27)

# யாழ்ப்பாணம் - ஆழியவளை பேருந்துச் சேவை சீரில்லை!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

யாழ்ப்பாணம் - ஆழியவளைக்கு இடையேயான அரச பேருந்து சேவையை சீராக மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆழியவளையைச் சேர்ந்த ஒருவரால் கடந்த மாதம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதில், யாழ்ப்பாணம் - ஆழியவளைக்கு இடையேயான 807 வழித்தட அரச பேருந்துச் சேவை சீராக மேற்கொள்ளப்படாமையால் அப்பகுதி மக்கள் பெரும் இன்னல்களையும் இடையூறுகளையும் சந்தித்துவருகின்றனர். இதுகுறித்து சுட்டிக்காட்டி சேவையை சீராக முன்னெடுக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜா, மேற்படி முறைப்பாடு தொடர்பில் அறிக்கையொன்றை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு வட பிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபை பிரதான பிராந்திய முகாமையாளருக்கு அறிவுறுத்தியுள்ளார். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்ப யாழ்ப்பாணத்தில உள்ள கட்டடமெல்லாம் திடீரெண்டு மண்ணுக்குள்ள புதைஞ்சு போகுதெண்டு வைச்சுக்கொள்ளுவம். நானூறு ஐநூறு வருசத்துக்குப் பிறகு இங்க ஒரு தொல்பொருள் ஆய்வு நடந்தா மற்றக் கட்டடங்களை அடையாளம் காண ஏலாட்டியும், உந்த திருநெல்வேலி மார்க்கெட்டை மட்டும் டக்கெண்டு கண்டுபிடிச்சிடலாம். அதெப்பிடி திருநெல்வேலி மார்கெட்டுக்கு மட்டும் அப்பிடி ஒரு ஸ்பெசல்? எண்டு நீங்கள் யோசிக்கக்கூடும்.

வேறஒண்டுமில்லை, அந்த மார்க்கெட் சுவரில தொட்டுத் தொடரும் வெத்திலைப் பாரம்பரியத்தின்ர சின்னமா, எல்லா இடமும் சிவப்புச் சிவப்பா வெத்திலைத் துப்பல் நிறைஞ்சிருக்கும். அதைவைச்சு 'இதுதான் திருநெல்வேலி மார்க்கெட்' எண்டு சுகமாக் கண்டு பிடிச்சிடலாம். இப்பிடி எங்கட திருநெல்வேலிச் சந்தைக்கு ஒரு அடையாளத்தைக் குடுக்கிறதுக்காக, அங்கயுள்ள யாவாரியள் அல்லும் பகலும் கொடுப்புக்குள்ள வெத்திலையை அதக்கிக் கொண்டு, தங்கட பிஸ்னஸ் போனாலும் பரவாயில்லை எண்டு ஆக்கள் நிக்கத்தக்கதாவே சுவரிலையும் சிமெந்து நிலத்திலையும் 'புளிச், புளிச்' எண்டு துப்பிக் கஷ்டப்படுகினம். சாமான் வாங்க வாறவையும் அவைக்குச் சளைச்சவையில்லை. அவையிலையும் அரைவாசிப்பேர் சந்தைச் சுவரிலதான் வெத்திலைத் துப்பலால கோலம் போட்டிட்டு போவினம். சிலர் வெத்திலை துப்பவெண்டே வீட்டில இருந்து திருநெல்வேலி மார்க்கெட்டுக்கு மினக்கெட்டு வருகினமெண்டால், இதின்ர புகழ் எங்க மட்டும் பரவியிருக்கு எண்டு பாருங்கோவன்.

அதவிட 'தாம் பெற்ற இன்பம் வையகமும் பெறட்டும்' எண்ட நல்லநோக்கத்தோட எங்கயெல்லாம் வெத்திலை துப்பியிருக்கோ, அந்தத் துப்பலின்ர ஈரம் காயமுதலே அதுக்குமேல, சுவரோட சேர்த்து மரக்கறிக்கட்டுகளைக் கொண்டுபோய் வைக்கிற வாடிக்கையும் திருநெல்வேலி மார்க்கெட்டில இருக்கு. இப்பிடி இவை வெத்திலைக்காவியால சந்தைக் கட்டடத்துக்கு சிவப்புப் பெயிண்ட் அடிப்பினம் எண்டு முதலே தெரிஞ்சிருந்தால், நல்லூர்ப் பிரதேசசபை உந்தக் கட்டடத்துக்கு பெயிண்ட் அடிக்காமலே குடுத்திருக்கலாம். இப்ப பிரதேசசபைக்கெல்லோ தேவையில்லாத நட்டம். இனிமேல் இப்பிடி சந்தைக்கட்டடம் கட்டிற பிரதேசசபையள், திருநெல்வேலி யாவாரியளிட்டையே பெயிண்ட் அடிக்கிற 'கொன்றாக்ட்டை'குடுக்கலாம், காசும் மிச்சம். ஒவ்வொரு சந்தைக்கும் சிவப்புக்கலரில வித்விதமான டிசைனும் போட்டுக்குடுப்பினம்.

இதையெல்லாம் விளங்காத எங்கட மோட்டுச் சனம், 'இப்பிடி வெத்திலை துப்பினால் சந்தைக்கு நாங்கள் போய்வாறேலையோ? மரக்கறியை வெத்திலைத் துப்பலுக்கு மேல வைக்கிறதை பி.எச்.ஐ. மார் பிடிக்காயினமோ? ஆக்களைப் பாக்காமல் வெத்திலையைத் துப்பினால் எங்கட மூஞ்சையில எல்லோ பறக்குது? நாளைக்கு உந்தத் துப்பலால எங்களுக்கு வருத்தம் வந்தா ஆர் பொறுப்பு?' எண்டெல்லாம் விசர்க்கதையள் கதைக்குது. அப்பிடி உதெல்லாம் சுகாதாரத்துக்கு உந்த வெத்திலைத் துப்பல் கேடு எண்டால், எப்பவோ பி.எச்.ஐ. மார் உதைத் தடுத்திருப்பினமே. அவையே உதை அனுமதிக்கினமெண்டால், வெத்திலைத்துப்பலின்ர மகத்துவம் அவைக்கும் தெரிஞ்சிருக்கு எண்டுதானே அர்த்தம். மோட்டுச் சனம் ஆயிரம் சொல்லட்டும், நீங்கள் வடிவாத் துப்புங்கோ.



- பட்சி

# ஆசிரியரைத் தாக்கி தங்கச்சங்கிலி பறிப்பு

## கட்டைக்காட்டில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 11

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காடுப் பகுதியில் ஆசிரியை ஒருவரின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கட்டைக்காடு - பருத்தித்துறை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பட்டப்பகல் வேளையில் நடந்துள்ளது.

குறித்த ஆசிரியை வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது அந்தவீதி வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், அவரது கழுத்திலிருந்த சங்கிலியை அறுக்க முற்பட்டுள்ளனர்.

ஆசிரியை சுதாகரித்துக் கொண்டு பறிக்கவிடாது இழுத்தபோது சங்கிலி பாதி அறுந்த நிலையில் பாதியை அபகரித்துச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் ஆசிரியையால் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-100)







### நசுங்கியுளம் நலிகின்ற நிலை நீக்கு!

அசுரர்களோ அமரர்க்கு அழிவைச் செய்ய
ஆங்கவர்க்கு அபயமதை அளித்து என்றும்
பசுமைமிகு தமிழினையே கேட்க ஔவைப்
பாட்டிக்குச் சுட்டபழம் தந்த தேவா
விசும்பினையும் எட்டி நின்ற புகழைப் பெற்ற
வாழ்வதனை அமைந்திட்ட மக்கள் இன்று
நசுங்கியுளம் நலிகின்ற நிலையை நீக்கி
நல்லதொரு தீர்வினை நீ காட்டவாராய்!

நா.ஸ்ரீவித்தியாதர், வட்டுக்கோட்டை

# தாய் மற்றும் மகள்மீது நீர்வேலியில் வாள்வெட்டு

யாழ்ப்பாணம், செப்.11

தாய் மற்றும் மகள் மீது நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், நீர்வேலியில் நடந்துள்ளது. நீர்வேலியைச் சேர்ந்த 24 வயதான யுவதி மற்றும் 65 வயதான அவரது தாய் ஆகியோரே சம்பவத்தில் காயமடைந்துள்ளனர். வீட்டுக்குள் நுழைந்த இருவர் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

# தையிட்டி விகாரைக் காணி அபகரிப்பைத் தடுக்க திரள்க

யாழ்ப்பாணம், செப்.11

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அதைத் தடுத்து நிறுத்த அனைவரும் திரளவேண்டும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணியைச் சுவீகரிக்க நில அளவைத் திணைக்களமும், அரச அதிகாரிகளும் வரவுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தமிழ் மக்கள் அங்கு திரண்டு எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டும் என்று கோருகின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்தார். (எ-27-66)

# இரவு வேளைகளில் மோ.சைக்கிள் களவு

## அச்சுவேலியில் இருவர் கைது

யாழ்ப்பாணம், செப்.11


இரவுவேளைகளில் மோட்டார் சைக்கிள்களைத் திருடி வந்த குற்றச்சாட்டில் இருவர் அச்சுவேலிப் பகுதியில் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் திருட்டுகள் இரவுவேளைகளில் இடம்பெறுகின்றன என கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய காங்கேசன்துறை மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் இந்தக் கைது இடம்பெற்றது.

குப்பிளான் மற்றும் அச்செழுப் பகுதிகளைச் சேர்ந்த 21 ,29 வயதுடைய சந்தேகநபர்களே கைதுசெய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன. சான்றுப்பொருள்களுடன் சந்தேகநபர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களை சட்டநடவடிக்கைக்குட்படுத்த அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாச ரதத்தில் நல்லூரான்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவின் 20 ஆம் நாள் மாலைத் திருவிழாவான கைலாச வாகனத் திருவிழா அடியவர்கள் சூழ நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறப்புற நடைபெற்றது. வசந்தமண்டபப் பூசைகளைத் தொடர்ந்து நல்லூர் வேற்பெருமான் வள்ளி - தெய்வயானை சமேதரராக எழுந்தருளி ஆலய முன்றிலில் நிறுத்தப்பட்டிருந்த கைலாச வாகனத்தில் எழுந்தருளினார். (ச-66)

# நிழற்படக் காட்சியும் கருத்துரையும்

யாழ்ப்பாணம், செப். 11

தேசிய நம்பிக்கை நிதியம், இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண் கலைத்துறையுடன் இணைந்து பிரிட்டிஷ் கவுன்ஸிலின் ஆதரவில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் 20 ஆம் திகதி வரை 'இலங்கையில் ஒரு ஸ்கொட்லாந்து ஓவியர்: எட்வேட் அட்கின்சன்ஸ் ஹோனல்' என்ற நிழற்படக்காட்சி நுண்கலைத் துறையின் காட்சிக்கூடத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

காட்சியை கட்டடக்கலைஞரும் கலை வரலாற்றாசிரியருமான ஸ்மத் ரஹீம் எடுத்தாளுகை செய்துள்ளார்.

நிகழ்வில் 19ஆம் நூற்றாண்டில் மன்னார் முத்துக்குளிப்பு, மலையகத்தில் பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையின் தொடக்கம் மற்றும் தென்னிலங்கை மக்களின் பண்பாடு சார்ந்த 43 நிழற்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்தக்காட்சியை முன்னிட்டு விசேட கருத்துரைகள் பல்கலைக்கழகத்திலும் பிரிட்டிஷ் கவுன்ஸிலிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாவது உரை பிரிட்டிஷ் கவுன்ஸிலில் முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும். 'யாழ்ப்பாணத்தில் ஆரம்ப நிழற்படங்களின் வளர்ச்சியில் அமெரிக்க கிறிஸ்தவ மிஷனரி இயக்கம்' என்ற தலைப்பில் இஸ்மத் ரஹீம் உரையாற்றுவார்.

உரையைத்தொடர்ந்து குறும் திரைப்படத் திரையிடலும் நிகழவுள்ளது. இந்த நிகழ்வுக்கு புகைப்பட மற்றும் பண்பாடு சார் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர். தா.சனாதனன் கேட்டுக்கொண்டுள்ளார். (ய)

# சாவகச்சேரி - புலோலி வீதி; முழுமையாகச் சீரமையுங்கள்

## ஆளுநருக்கு பொதுஅமைப்புகள் கடிதம்

சாவகச்சேரி, செப். 11

இடைநடுவில் புனரமைப்புப் பணிகள் நிறுத்தப்பட்ட சாவகச்சேரி - புலோலி வரையான வீதியின் பணிகளை முடிவுறுத்தி வீதியை தார் வீதியாக மாற்றித் தாருங்கள் என்று அந்தப் பகுதி பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதமொன்றை அனுப்பி இதனைத் தெரிவித்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ள தாவது:-

கடந்த ஆறு வருடங்களாக இந்த வீதி புனரமைப்பின்றி காணப்பட்ட நிலையில் பொது அமைப்புகளும் பொதுமக்களும் விடுத்த கோரிக்கைக்கமைய 'ஐ-றோட்' திட்டத்தின் கீழ் தென்மராட்சி - வடமராட்சி இணைப்பு வீதிகளான சாவகச்சேரி - புலோலி வீதியும் கச்சாய் - புலோலி வீதியும் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டது.

இரு வேலைகளும் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கச்சாய் - புலோலி வீதி புனரமைப்பு வேலைகள் முடிவடைந்தன. ஆயினும் சாவகச்சேரி - புலோலி வீதியில், சாவகச்சேரி அஞ்சலக சந்தியிலிருந்து ஒரு மைல் தூரம் தார்க்கலவை வீதியாகப் புனரமைக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆறு வருடங்களாகப் புனரமைப்பின்றிய இந்த வீதியால் மழைகாலங்களில் மக்களும் வாகனங்களின் சாரதிகளும் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சாவகச்சேரியிலிருந்து பெருங்குளம், கிராம்புவில், கெருடாவில், சரசாலை, மட்டுவில், கல்வயல் கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்களும் வலிகாமம், வடமராட்சி உள்ளிட்ட இடங்களுக்குச் செல்வோரும் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர். இந்த வீதி வலிகாமம்-வடமராட்சி பிரதேசங்களுக்குச் செல்வதற்கு குறுகிய வீதியாகவும் காணப்படுகிறது.

எனவே இடைநிறுத்தப்பட்ட குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு முழுமையாகப் புனரமைத்துத் தாருங்கள்- என்றுள்ளது. (ச-9)

# இராணுவத்தினரால் தென்னங்கன்றுகள்

முல்லைத்தீவு, செப். 11

தெங்குச் செய்கையில் ஊக்குவிக்கும் நோக்கில் வடக்கில் தெங்கு முக்கோண வலயத்தில் ஒன்றாகக் காணப்படும் முல்லைத்தீவில் 55 குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் 2 ஆயிரத்து 700 தென்னங்கன்றுகள் கையளிக்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் படைப்பிரிவின் தலைமைக் காரியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு இராணுவப் பாதுகாப்பு தலைமையகப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் எம்.கே. ஜெயவர்த்தன தென்னங்கன்றுகளை வழங்கிவைத்தார். (ச-19)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் தமிழகப் பொலிஸில் தஞ்சம்!

யாழ்ப்பாணம், செப்.11

இலங்கையிலிருந்து படகு மூலமாகத் தமிழகத்தின் தனுஷ்கோடி சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் நேரடியாகவே தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ஒருவரே படகு மூலம் தமிழகம் சென்றுள்ளார் என்று தெரியவருகின்றது.

படகு மூலம் தனுஷ்கோடியை அடைந்த அந்தநபர் நேரடியாக பொலிஸ் நிலையம் சென்று தஞ்சமடைந்தார். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர் அகதிகள் மறுவாழ்வு முகாமுக்கு அனுப்பப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-100)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். சிந்தனை மேலோங்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பணவரவு இருந்தாலும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தம் ஏற்படக்கூடும். வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம் :** புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சி ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சலுடன் உடல் அசதியும் ஏற்படக்கூடும். உற்சாகம் பெறுவீர்கள்.

**கடகம்:** மனதில் இனம்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணை வழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். சிரமங்கள் ஏற்படும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். உறவினர்களுடனும் வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்கு தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் சிலருக்குக் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மீண்டும் மீண்டும் தவறிழைக்கும் கர்தினால்

'ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் தங்களுடைய தவறை ஒப்புக்கொண்டால் நான் உட்பட கத்தோலிக்கத் திருச்சபையினர், அவர்களுக்கான மன்னிப்பை வழங்கத் தயாராகவுள்ளோம். அவ்வாறு செய்ய முடியவில்லை எனின் நாம் மதங்களைப் பின்பற்றுவதால் உள்ள பயன் தான் என்ன ?' என்று , ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான கொழும்பு கொச்சிக்கடை தேவாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கேள்வி எழுப்பியிருக்கின்றார் கர்தினால் மல்கம் ரஞ்சித். ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் 'சனல் – 4' வெளியிட்ட காணொலியை அடிப்படையாக வைத்து அவர் இந்தக் கருத்தை முன்வைத்திருக்கின்றார்.

மக்களைப் பிழையாக வழிநடத்திய கர்தினாலுக்கு இவ்வாறு சொல்வதற்குத் தகுதி உண்டா? என்று முதலில் அவர் யோசிக்கவேண்டும். ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் நல்லாட்சி காலத்தில் நடத்தப்பட்டது. இதன் பின்னரான ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கோத்தாபய ராஜபக்ச, ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதியை நிலைநாட்டுவேன் என்று கூறியிருந்த நிலையில் அவரை கர்தினால் ஆதரித்திருந்தார். ஆனால், 'சனல் – 4' தொலைக்காட்சியின் அண்மைய காணொலி அந்தத் தாக்குதலை திட்டமிட்டதே ராஜபக்சக்கள் அதிகாரத்துக்கு மீண்டும் வருவதற்குத்தான் என்பதைச் சொல்லியிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் மக்களைப் பிழையாக வழிநடத்திய மல்கம் ரஞ்சித் இனிமேல் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கருத்துச் சொல்வதற்கு அருகதையற்றவர். காணொலி வெளியான கையோடு முதல் வேலையாக அவர் தனது பதவியை துறந்திருக்க வேண்டும்.

இதற்கு மேலாக, ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்குப் பொறுப்பானவர்கள் தவறை ஒப்புக்கொண்டால், தான் உட்பட கத்தோலிக்க திருச்சபை மன்னிப்பு வழங்கத் தயாராக இருப்பதாகச் சொல்வதற்கு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு என்ன உரித்து உண்டு? ஈஸ்டர் தாக்குதலால் பாதிப்பை சந்தித்தது கிறிஸ்தவர்கள் மாத்திரமல்லவே? ஒட்டுமொத்த நாடும் குறிப்பாக முஸ்லிம் சமூகம் இதனால் மிகப் பெரிய பாதிப்பை எதிர்கொண்டது. சந்தர்ப்பம் பார்த்திருந்து அந்தச் சமூகத்தின் மீது மிக மோசமான பழிச்சொற்கள் ஏவிவிடப்பட்டன. அந்தச் சமூகம் ஒரு கருவியாகவே ஈஸ்டர் தாக்குதலில் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், அந்தச் சமூகமே மிகமோசமான பயங்கரவாதிகள்தான் என்ற அளவில் அவர்கள் மீது வசைபாடப்பட்டன, முத்திரை குத்தப்பட்டன, அவர்களுடன் இணைந்து தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டார்கள். அதைவிட 'சனல்–4' ஊடகம் குறிப்பிடுவதைப்போன்று இந்தத் தாக்குதல் ஊடாக ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்தமையால் அவர்களது ஆட்சியில் தமிழர்களும் பெரும் பாதிப்பை சந்தித்திருந்தார்கள். பௌத்த – சிங்களப் பேரினவாதத்தை நிலைநிறுத்தும் ராஜபக்சக்களின் முயற்சியால் ஒட்டுமொத்த சிறுபான்மையினத்தவர்களும் பெரும் பாதிப்பை எதிர்கொண்டிருந்தனர்.

அப்படியிருக்கையில் ஈஸ்டர்தாக்குதல் குற்றவாளிகளுக்கு கத்தோலிக்கத் திருச்சபை மாத்திரம் எப்படி மன்னிப்பளித்து அவர்களைப் புனிதர்களாக்க முடியும். ரஞ்சித் ஆண்டகை அவர்களே! நீங்கள் முதலில் மதத் தலைவராக இருப்பதற்கான தகுதியுடன்தான் இருக்கின்றீர்களா? என்பதை சுயபரிசோதனை செய்துகொள்ளுங்கள். நீங்கள் மதத் தலைவர் என்பதைத்தாண்டி ஒரு இனக்குழுமத்துக்கான அதுவும் சிங்களவர்களுக்கான மதத்தலைவராகவே உங்களை நியாயப்படுத்திக்கொண்டு இருக்கின்றீர்கள்.

எப்போது ஒரு கண்ணில் வெண்ணெய்யும் மறு கண்ணில் சுண்ணாம்புமாக நீதித் தராசைத் தூக்க முயன்றீர்களோ அப்போதே நீங்கள் மன்னிப்பளிப்பதற்கான தகுதியை இழந்துவிட்டீர்கள். இந்த நாட்டின் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை தொடர்பான சர்வதேச விசாரணைக்கோரிக்கையை நிராகரித்த நீங்கள், இப்போது உங்களுக்குத் தேவையான ஒன்றுக்கு சர்வதேச விசாரணையைக் கோரும் போதே, உங்கள் வெள்ளாடை மீது கறைபடிந்துவிட்டது கர்தினால் அவர்களே!

**நாளொரு நல்வார்த்தை**

கண் பார்வையற்றவன் குருடன் அல்லன், தன் குற்றங்களை உணராதவனே குருடன்

–மகாத்மா காந்தி




## பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையை கண்டிக்கின்றது பேராயர் இல்லம்

**கொழும்பு, செப்.11**

**ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாகச் 'சனல்- 4' காணொலி ஊடாகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை முழுமையாக நிராகரித்து பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையை கொழும்பு பேராயர் இல்லம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இந்த வெளிப்படுத்தல் தொடர்பில் உரியமுறையில் விசாரணை நடத்தாமல் அதை உடனடியாக நிராகரிப்பது பொருத்தமற்ற செயற்பாடு என்று கொழும்பு பேராயர் இல்லத்தின் செய்தி தொடர்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

'சனல்- 4' காணொலியில் உள்ள சில விடயங்கள் தொடர்பில் பரபரப்பாகப் பேசப்பட்டாலும், இதில் சந்தேகத்துக்குரிய பகுதிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. பிள்ளையானின் நடவடிக்கைகள், தற்கொலைக் குண்டுதாரிகள் போன்ற சில வெளிப்படுத்தல்கள் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளன.

மேஜர் ஜெனரல் சுரேஷ் ஷாலேவை தூக்கிலிடவோ, கோத்தாபய ராஜபக்சவை ஆயுள் முழுவதும் சிறையில் அடைக்கவோ நாம் கோரவில்லை. இந்தக் காணொலியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தீவிரமாக விசாரித்து அதன் பின்னர் அறிக்கை வெளியிடவேண்டும் என்று கொழும்பு ஆயர் இல்லம் கோரியுள்ளது. ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை மேலும் துன்பத்தில் ஆழ்த்தும் வகையில் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று கொழும்பு பேராயர் இல்லத்தின் செய்தி தொடர்பாளர் அருட்தந்தை ஜட் கிரிஷாந்த பெர்னாண்டோ தெரிவித்தார். (எ-இ)

## சுகாதார நெருக்கடிக்கு ஐ.நா.வில் முறைப்பாடு!

நாட்டில் நிலவும் சுகாதார நெருக்கடி தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்த யாப்பா பண்டார ஐக்கிய மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடு செய்யவுள்ளார். அதற்காக அவர் நேற்றுமுன்தினம் ஜெனிவா நோக்கிப் பயணமாகியுள்ளார்.

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் ஊசிகள் தொடர்பில் எந்தத் தகவல்களும் இல்லை. தடுப்பூசிகளால் நாட்டில் பலர் உயிரிழந்துள்ளார்கள் என்பவற்றை ஐ.நா.வில் வலியுறுத்தவுள்ளேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்துள்ளார். (எ-இ)

## மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும்

*பிள்ளையான் வலியுறுத்து*

மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட்டு அதிகாரப்பகிர்வு இடம்பெற வேண்டியது அவசியமாகும் என்று வலியுறுத்தியுள்ளார் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான 'பிள்ளையான்' எனப்படுகின்ற சிவநேசதுரை சந்திரகாந்தன்.

இலங்கைக்குள் தமிழ் மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும். சிங்கள மக்கள் அந்த மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களிடம் இருக்கின்றனர்- என்றார். (ஒ-44)

**நாளை**

**12.09.2023**
**செவ்வாய்க்கிழமை**
**ஆவணி 26**

சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33

**நல்லூர் ஆலய சப்பரம்**
**பிரதோஷ விரதம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சுற்றுலா அபிவிருத்தி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். மாவட்டத்தின் சுற்றுலா அபிவிருத்தி தொடர்பான வடமாகாண சுற்றுலாத் துறையினருடனான கலந்துரையாடல் கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்டச் செயலர் அலுவலகத்தில் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சுற்றுலாத் துறை ஊக்குவிப்புக்கான மென் செயலி உருவாக்கம், தொல்பொருள் சின்னங்கள், கலாசார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் காட்சிப்படுத்தல், பிரதே சத்தைப் பிரதிபலிக்கக்கூடிய உற்பத்திகளை மேற்கொள்ளல், கப்பலில் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை உள்ளூர்மட்டத்தில் அழைத்து வரும் போக்குவரத்துச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களுக்கான விருந்தோம்பல் பயிற்சி களை வழங்குதல், இந்தியாவிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் பாரம்பரிய உற்பத்திப் பொருள்கள், பாரம்பரிய உணவுகளை உள்ளடக்கிய மத்திய நிலைய மொன்றை ஏற்படுத்தல், மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு பெயர்ப் பலகையிடுதல், 2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச சுற்றுலாத் தின நிகழ்வுகளை யாழ். மத்திய கலாசார நிலையத்தில் நடத்துதல் மற்றும் பலாலி விமான நிலையத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல் நிலையம் அமைத்தல் என்பன தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (ஒ-ரி2-66)





## கிளி. குமாரசாமிபுரத்தில் தண்ணீருக்கு அந்தரிப்பு!

**கிளிநொச்சி, செப்.11**

**கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரத்தில் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர்.**

தற்போது நிலவும் வறட்சி காரணமாக மண் கிணற்றில் உள்ள நீர் வற்றியுள்ளதால், அயல் கிராமத்துக்குச் சென்று தண்ணீர் கொண்டுவர வேண்டிய நிலைமை உள்ளது என்று கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தண்ணீர்ப் பற்றாக்குறையால் வயோதிபர்கள், சிறுவர்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில், குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த காலங்களில் பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அது நிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்த கிராம மக்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-113)

## கட்டடக் கட்டுமானம் யாழில் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.11

வீடமைப்புக் கட்டுமானம் தொடர்பான சகலவிதமான சேவைகளையும் பெற்றுக்கொள்ளும் வகையில் ஐங்கரன் மீடியா சொலுஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் 15ஆம், 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி முதல் இரவு 8 மணிவரை நடைபெறவுள்ளது.

கண்காட்சியில், கட்டட நிர்மாணம் தொடர்பான சகல விதமான சேவைகள், விவரங்கள் மற்றும் ஆலோசனைகளோடு, வீட்டு உபகரணங்கள் அவற்றின் பயன்பாடுகள் அடங்கலாக பல தரப்பட்ட விடயங்கள் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் நகர அபிவிருத்தி அதிகார சபையினரின் காட்சிக்கூடமொன்றும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அதில் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு, நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் எவ்வாறு அனுமதி பெறவேண்டும் என்பவை தொடர்பிலான விவரங்களைக் கேட்டு அறிந்துகொள்ள முடியும் என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-27)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், செப். 11

சுன்னாகம் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் மறைந்த கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவுநாளும் நினைவுப் பேருரையும் இன்று திங்கட் கிழமை காலை 8.45 மணிக்கு சுன்னாகத்திலுள்ள செல்லா மண்டபத்தில் வாழ்வகத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பங்கேற்கவுள்ளார். கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்துகொள்ளவுள் ளார்.

நினைவுப் பேருரையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை போசணையாளர் திருமதி வாசினி ராசதுரை ஆற்றவுள்ளார். (ச-இ)



யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக ஆய்வுகூடத்துக்குச் சென்று ஊடகத்துறையின் மேம்பாடு தொடர்பாகக் கலந்துரையாடினார். மாணவர்களுடன் உரையாடலில் ஈடுபட்ட இந்தியத் துணைத் தூதுவர் கற்கைகள் தொடர்பான மாணவர்களின் தயாரிப்புகளைப் பாராட்டினார். (எ-27)



## வவு.பல்கலையில் 307 மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்

வவுனியா, செப்.11

வவுனியா பல்கலைக்கழகத்தின் வணிக பீடத்தால் நடத்தப்பட்ட இளைஞர் தலைமைத்துவ டிப்ளோமா கற்கைகளை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது. டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்த 307 மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வவுனியா பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் வை.நந்தகோபன் மற்றும் யு.என்.டி.பியின் திட்ட மேலாளர் மொஹமட் முசைன் ஆகியோர் பங்கேற்றனர். (ச-26,27)

## சாதனை நடைபயணம்

யாழ்ப்பாணம், செப்.11

தெய்வேந்திரமுனையில் இருந்து எஸ்.பி.விக்கிரமசிங்க என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட சாதனை நடைபயணம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குப் பருத்தித்துறையை வந்தடைந்தது.

இலங்கையில் 600 கிலோமீற்றரை நடந்து கடந்த முதலாவது நபர் என்ற சாதனையை இந்த நபர் செய்துள்ளார். (எ-100)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடியிலிருந்து குதித்து புலம்பெயர் பெண் சாவு!

## கல்கிஸையில் சம்பவம்

கல்கிஸ்ஸை அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் வசித்து வந்த இங்கிலாந்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை நடந்துள்ளது.

இளம்பெண்ணுக்கு சட்டக்கல்லூரி மாணவன் ஒருவருடன் முகநூல் ஊடாக அறிமுகம் ஏற்பட்டு காதல் மலர்ந்துள்ளது. அதனையடுத்து குறித்த பெண் இலங்கைக்கு வந்து கல்கிஸை - அல்விஸ் மாவத்தையிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் குறித்த மாணவனுடன் தங்கியிருந்தார்.

இந்தநிலையில் குறித்த நபருக்கும் இளம் பெண்ணுக்கும் இடையே சம்பவத்தினத்தன்று வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவனைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## சாரதி தேவை

கொக்குவில் தாவடியில் அமைந்துள்ள

**அரிசி ஆலை**

ஒன்றிற்கு சாரதிதேவை.

(cs.52048) (N.1)

**076 096 9728, 076 096 9734**

## காணி, வீடு விற்பனைக்கு உண்டு

நீர்வேலி கரந்தன் பகுதியில் 3 பரப்பாகப் பிரிக்கப்பட்ட 8 துண்டு வடக்கு வாசல் வீடு கட்டக்கூடிய காணிகள் விற்பனைக்குண்டு.

நீர்வேலி பகுதியில் இராசவீதி பாதையில் 500m தூரத்தில் 4 பரப்புக் காணியில் வீடு விற்பனைக்கு உண்டு.

(cs.52021) ( N.1)

**076 796 0056, 021 205 4511**

## மரண அறிவித்தல்



**செல்லையா இராசரத்தினம்**

( S.R.P நிறுவன உரிமையாளர் )


தாவடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசரத்தினம் நேற்று (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஆசாரி வீதி,
காளி கோவிலடி, தாவடி.

தகவல்
குடும்பத்தினர்

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 . 08 . 1934



இறப்பு 01 . 09 . 2013

**அமரர் கைலாயபிள்ளை சிவலிங்கம்**

**திதி: துவாதசி**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானடைந்து
பத்து ஆண்டு ஆனாலும் ஐயா!
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்!
அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
எம்மை வழிநடத்திய அந்த நாட்கள்
எம் நினைவலைகளில் என்றும் சுழல்கிறதே ஐயா!
நீங்கள் எம்மை விட்டு நீண்டதூரம் சென்றாலும்
உங்கள் அறிவுரைகள் அரவணைப்புக்கள்
என்றும் எங்கள் நெஞ்சங்களில் உயிர்வாழும் ஐயா!

கதிரிப்பாய்,
அச்சுவேலி.

என்றும் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

(cs.52014) (N.1)

## ஐ.நா. படையிலுள்ள

# இலங்கை இராணுவத்துக்கு லெபனானில் கௌரவம்!

கொழும்பு, செப். 11

லெபனானில் ஐ.நா.அமைதிகாக்கும் படையில் கடமையில் ஈடுபட்டுள்ள இலங்கை இராணுவத்தினர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விருது வழங்கும் நிகழ்வு லெபனானிலுள்ள ஐ.நா.அமைதி காக்கும் படை தலைமையகத்தில் கடந்த வாரம் நடைபெற்றது. நிகழ்வில் லெபனானின் இலங்கைத் தூதுவர் கபில ஜெயவீர பங்கேற்றார். இலங்கை இராணுவத்தினரின் அர்ப்பணிப்பான சேவைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

# மரண அறிவித்தல்

# திருமதி துரைசிங்கம் பரமேஸ்வரி



தோற்றம் 16.05.1950 — மறைவு 10.09.2023

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைசிங்கம் பரமேஸ்வரி நேற்று (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னுத்துரை துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பஞ்சநாதன், பவளராணி, பாக்கியநாதன், பராசக்தி மற்றும் காலஞ்சென்றவர்களான பராசக்தி, பத்மராஜா, பவானிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியரூபன் (சிவா - லண்டன்), காந்தரூபன் (சிறி - பிரான்ஸ்), கடம்பரூபி (ரூபி - பிரான்ஸ்), புவனரூபன் (ராஜன் - கொக்குவில்), பத்மரூபி (பத்மா - கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகலா (கலா), உதயபாலன் (டத்தோ), விஷ்னுகுமார் (விஷ்னு), உமாஜினி (உமா), ரதி, டிலாஜினி, சாரங்கா, அமீர், தவரூபன், றசீகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜதுசன், ஜதீசன், பர்மிளா, சஜீகன், பார்கவி, ராகவி, தரணிகா, சந்தோஷ், கேசகி, வைஷாலி, அபிஷாலி, ஜஸ்மின், இசான், சயான், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நித்தியானந்தராணி, விசயா, சந்திரசேகரம், மாணிக்கராஜா, ரேவதி, சுந்தரலிங்கம், கண்மணி, நவமணி, தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அச்சுதன் அரங்கனா, நிறோஜன், நிறாதன், சிந்து, பைரவி, பாரதி, விவேக், வேதிகா, ஆர்த்திகா ஆகியோரின், பாசமிகு பெரியம்மாவும், பிரியங்கா, பிரசாந், அன்புராஜ், அற்புதராணி, அம்பிகா, லோகன், சியாமளா, டினேசன், லோஜி, லக்சாயினி, அச்சுதாயினி, அலெக்சன், டுலக்சன் ஆகியோரின் பாசமிகு அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.86, பிறவுண் றோட்
கொக்குவில்

(CS 52052) (k-1)

T.P : 077 414 5144
076 550 1939

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 - 11 - 1944 |  | 28 - 08 - 2023 |

## திரு. சாம் ஜெயச்சந்திரன் போல்

(ஓய்வுபெற்ற சீமேந்துக் கூட்டுத்தாபன மேற்பார்வையாளர், சுவிஷேஷகர்)

யாழ். செட்டித்தெருவை வசிப்பிடமாக கொண்ட திரு. சாம் ஜெயச்சந்திரன் போல் அவர்கள் கடந்த (28.08.2023) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் அருந்தவமலர் அவர்களின் அன்புக் கணவரும் சதீஷ், அருளியா, எலன்ரைன், ஒஸ்போன் அவர்களின் பாசமிகு தந்தையும், செல்வி, ஜனார்த்தனன், சத்தியா, நொயலின் ஆகியோரின் மாமனாரும், ஜெரமி, ஈதன், நேத்தன், கெர்ஷோன், ஜனாயா, எமோரி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை அவரது இல்லத்தில் நாளை (12.09.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று நுணாவில் அமெரிக்கன் சிலோன்மிஷன் மயானத்தில் அவரது பூதவுடல் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 436 1710
077 592 6832

தகவல் :
குடும்பத்தினர்

(CS 52051 ) (K-1)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 01 - 04 - 1952 |  | 10 - 09 - 2023 |

## சன்னதிமலர் இந்திரன்

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சன்னதிமலர் இந்திரன் அவர்கள் நேற்று (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் இராசா இந்திரன் (ஓய்வு பெற்ற உப அதிபர் - உடுவில், முருகமூர்த்தி வித்தியாசாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, அருமைத்துரை, சற்குணநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திலகராணி, காலஞ்சென்ற ஜெயராசா, கனகராசா, ஜெயக்குமார், சகுந்தலா (ஓய்வு பெற்ற ஆசிரியர் - தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அலெக்ஸ் ஜனார்த்தனன் (லண்டன்), அனுஷியா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலரூபி (லண்டன்), கனகேஸ்வரன் (வரன் - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், விதுஷன் (லண்டன்), கிஷானி, ஹரினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (11.09.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுவில் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| இந்திரன் (கணவர்) | : 077 556 0843 |
| அனுஷியா (மகள்) | : 076 752 8616 |
| ஜனா (மகன்) | : 071 877 1121 |
| சகுந்தலா (சகோதரி) | : 077 801 2219 |

தகவல் :
குடும்பத்தினர்
சங்குவேலி வடக்கு,
[illegible]

(CS 52050 ) (K-1)

## சட்டவிரோத மணல் அகழ்வு ஜே.சி.பி.வாகனம் பறிமுதல்

தருமபுரம் - நெத்தலியாற்றில் அனுமதியின்றி வயல் பகுதியில் மணலகழ்வில் ஈடுபட்ட ஜே.சி.பி. இயந்திரம் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்தக் கைது கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சந்தேகநபருக்கெதிராக வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்த தருமபுரம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-113)



ஓம் சக்தி

### ஏழாலை தெற்கு, களபாவோடை
### அருள் மிகு ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்மாள் தேவஸ்தானம்

## சண்டிஹோமப் பெருவிழா - 2023

எதிர்வரும் (14.09.2023) வியாழக்கிழமை

**சண்டிஹோமப் பெருவிழா**

காலை 6.00 மணி தொடக்கம் மு.ப.11 .00 மணிவரை நடைபெறும். 10.00 மணிக்கு மஹா அபிஷேகப் பூசை, சுவாமி உலாவருதலும் அன்னதானமும் இடம்பெறும்.

தேவஸ்தானம்

(cs.52037) (N.1)

ESTD : 13 July 1902

## விவேகானந்த சபை
## சைவ சமயப் பாடப் பரீட்சை - 2023
## பரீட்சைத்திகதி மாற்றம்
## 22.10.2023

எமது சபையினால் 22.10.2023 நடத்தப்படவிருக்கும் அகில இலங்கை சைவ சமயப்பாடப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வித் திணைக்களத்தின் பரிந்துரையின் பிரகாரம் மேற்படி பரீட்சைக்கான திகதி மாற்றப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பப்படிவமும் கையேடும் ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவை கிடைக்காத பாடசாலைகளும் புதிதாக இணைய விரும்பும் பாடசாலைகளும் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் சபையின் பரீட்சை கிளையின் WhatsApp 0777266461 என்ற இலக்கத்தின் மூலம் தொடர்பு கொண்டால் இலவசமாக விண்ணப்பப்படிவங்கள் கையேடு 2023. திருக்குறள் வழிகாட்டி, நாவலர் வினாவிடை என்பன அனுப்பிவைக்கப்படும்.

சென்ற வருடம் இப்பரீட்சைக்காக வடமாகாணத்திலிருந்து மேலதிகமாக 166 பாடசாலைகள் இணைந்து கொண்டமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

கடந்தகால வினாத்தாள்களைப் பெறவிரும்புவோர் பாடசாலை ஊடாகவோ நேரடியாகவோ WhatsApp மூலமாக விண்ணப்பித்தால் (டிஜிட்டல் முறையில் Pdf) இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

இவ்வருடத்திலிருந்து வழங்கப்படும் பரிசில்கள் ரூபா பத்து லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் இரு தங்கப்பதக்கங்கள் உட்பட 1000 பரிசில்கள் (ரூ. 500/-, ரூ. 1000/-, ரூ. 5000/-, ரூ.10000/-, ரூ 25000/-) பிராந்திய ரீதியாகவும் வழங்கப்படும். மேலும் 95 புள்ளி பெறும் சகல மாணவர் களுக்கும் (A+) Certificate உடன் பணப்பரிசில்களும் வழங்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இப்பரீட்சைக்கான புதிய விண்ணப்ப முடிவுத் திகதி**

**20.09.2023**

சு.சிவசண்முகநாதன்
பரீட்சைச் செயலாளர்,
28.08.2023

கலாநிதி எம்.ஆர்.ராஜ்மோகன்
சிரேஷ்ட சட்டத்தரணி
கௌரவ தலைவர்

(cs 25029) (N.1)

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சங்கரப்பிள்ளை நாகராஜா (தம்பியண்ணை)

தோற்றம் 17.05.1940 — மறைவு 01.09.2013



**திதி : துவாதசி**

எங்கள் குடும்பத்தின் சிகரமாகிய குலவிளக்கே.
நீங்கள் மண்ணிலிருந்து மறைந்து
ஒரு தசாப்த காலம்
கடந்து விட்டது எத்தனை ஆண்டுகள் கடந்து
விட்டாலும் எங்களோடு நீங்கள் வாழ்ந்த அந்த
பசுமையான நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டு அகலாது

உங்கள் நினைவுகளோடு என்றும் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
[illegible]தோர் வீதி, சாவகச்சேரி.

(CS 52047 (k-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டன. கிடைக்கப்பெற்ற பாடசாலைகளின் பரீட்சை முடிவுகள் வருமாறு:-

## உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

சு.கனிவிழி - 3ஏ, .ர.ரிசாந்தி - 2ஏB, யோ. துவாரகன்- ஏபிசி, ம.டினுசா- ஏபிசி, சு.பிரியதர்சினி- ஏ2சி, சு. பிரியங்கா- ஏ2சி, கே.சர்மிளா- பி2சி, ஜெ. திலக்சன் - பிசிஎஸ், கு. லதுர்சிகன்- பிசிஎஸ், செ.சுஜீபன்- 3சி, ச.பிரியங்கா - 2சிஎஸ் (ய-9)

## யாழ்ப்பாணம் சென்றல் கல்லூரி

**பொறியியல் தொழில்நுட்பம்**
ரா.கிருபாகரன்- 2ஏபி, அ.கனிஸ்ரன்- 2ஏபி சி. தமிழழகன்- பி2சி

**வர்த்தகப்பிரிவு**
கொ.சஞ்சய்- 3ஏ வி.அனோஜன் -3ஏ சி.முகமட் சஹ்ரான்- 2ஏபி, சி.நிரூஜன்- 2ஏபி, ச.முகமட் ஆசிக் - ஏ2பி, யூ.நிகேஷ் பெல்சியன்- ஏபிசி, ஞா.கனிஸ்ரன் - 3பி

**கணிதப்பிரிவு**
கபீசன் - ஏ2பி

**விஞ்ஞானப்பிரிவு**
ப.கிரிசரன்- 3பி வி.டிலக்ஷன் - பி2சி

**கலைப்பிரிவு**
கே.அபின்சன் - 2பிசி (ய-27)

## யாழ்ப்பாணக் கல்லூரி

**உயிரியல் பிரிவு**
எஸ்.சஜீந்தன்- 3ஏ, கே.கீதாஞ்சலி -3ஏ, ஏ.திஷாங்கன் - 3ஏ, வி.தனுஷிகா- 2ஏபி, யூ.கிருஷிகா- 2ஏசி, ஜே.மதுரா - 2பிசி, ஜே.திலக்சன்- பி2சி, வை.மாதங்கி- 2பிஎஸ், ஐ.கிருஷனா- பிசிஎஸ், எஸ்.யுலக்சனா- பிசிஎஸ், எஸ்.யதுர்ஷனா- 3சி, பி.கிறிஷ்ரின்- 3சி

**பௌதிக விஞ்ஞானப் பிரிவு**
கே.யதுஷன்- 2ஏபி, பி.திரிகரன்- 2ஏபி, ஏ.செந்தூரன்- 2ஏபி, பி.நிருஷன்- 2ஏபி, எஸ்.பிரஷான்- 3பி, எல். டிரோன்- 3பி, என்.நிருபன்- 3பி, எஸ்.ராகுலன்- பி2சி, கே.அபிஷேக்- ஏ2சி, ஜே.கீதவர்ஷன்- 3சி, கே. தமிழ்சுடர்- ஏசிஎஸ், வி.தனுஹரன்- பிசிஎஸ், எஸ். துவாரகா- 2சிஎஸ்

**வணிகப் பிரிவு**
ஏ.அனுஜா - 2ஏபி, எஸ்.சிறிமீரா- ஏபிசி

**கலைப்பிரிவு**
எஸ்.வர்ணதீபா- 2ஏஎஸ், எஸ்.பவதாரணி - 2பி சி, எஸ்.ஆரணி - 2பிசி, பி.சிறீராஜேஷ்வரி- ஏ2சி (ய-27)



கடந்த 4ஆம் திகதி திங்கடகிழமை வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின்படி வவுனியா சைவப்பிரகாச மகளீர் கல்லூரியல் கல்வி பயின்ற மாணவி கோணேஸ்வரன் மோகனபிரதா விஞ்ஞானப்பிரிவில் 3ஏ சித்தி பெற்று மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும், அகில இலங்கையில் 68வது இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். (ய-27)

## யா/ அருணோதயக்கல்லூரி, அளவெட்டி

**கணித/ விஞ்ஞானப் பிரிவு**
உ.கம்சாயினி -3ஏ, ம.லட்சிகன்- 3ஏ, ரா.சதீசன் -2ஏசி, சே.கிருஷ்ணவேணி - 2ஏசி, தி.கேசிகா -ஏ2பி, ஸ்ரீ.அம்சவர்த்தனா - ஏபிசி, யோ.ஜெசித்தா - ஏ2சி, து.கேந்தினி - 2பிசி, து.கவிப்பிரியன்- பி2சி, கி. தர்சனன் - 3சி

**வணிகப்பிரிவு**
சி.டேனுஜன் - 3ஏ, ச.மதுசா - 2ஏபி

**கலைப்பிரிவு**
சு.தனுஸ்கா -3ஏ, வ.சானுஜா -3ஏ, இ.அபிநயன் - 2ஏசி, வ.தர்சன் - ஏ2பி, வி.துலக்சனா- ஏ2பி, ச. ஆதீசன் - ஏ2பி, ர.ரஜிந்தன் - ஏபிசி, சி.சுபாகரன்- ஏபிசி, சி.சுபந்தினி - ஏபிசி, சு.நிக்சன் -ஏபிசி, அ. டினுஜன் - ஏ2சி, த.பிரியாழினி- ஏ2சி, த.விதுசன் - 2பிசி, க.பமில் - 2பிசி

## யா/ வரணி மத்திய கல்லூரி

**கலைப்பிரிவு**
ஆர்.சுவர்க்கா - 3ஏ,ரி.ஜதுசா - 3ஏ, எஸ்.சாதனா - 3ஏ, வை.ரட்சகன் - ஏ2பி ,கே.பிரியங்கா - ஏபிசி, என். சிவர்னா - ஏ2பி, எஸ்.தேனுஜா - 3பி, யு.சுருதிகா- ஏ2பி

**வர்த்தகபிரிவு**
பி.வேதுஜன் - ஏ2சி

**கணிதப்பிரிவு**
கே.பிரதாப் - ஏ2பி, எஸ்.வர்னிதா - பிசிஎஸ், கே. சவீனா - 2சிஎஸ் (ய-9)

## சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானப் பிரிவு**
பி.வித்தகி - 3ஏ, பா.பத்மஜன் - 2பிசி, கு.மிதுனன் - 2பிசி, கு.திவ்யா - 2சிஎஸ், மு.சுஜனி - பிசிஎஸ், ஜெ.ஜனனி - பிசிஎஸ், கெ.டிஷாந் - பிசிஎஸ், ப.கேஷாயினி - 2சிஎஸ்

**பௌதிக விஞ்ஞானப் பிரிவு**
வ.கபீசன் - 2பிசி, ஜீ.கஜீவன் - பி2சி, ப.கஜானன் - பிசிஎஸ், க.கௌதமன் - பி2சி

**வர்த்தகப் பிரிவு**
இ. தீபிகா - 3ஏ, பி.மதுரா - 2ஏபி, பா.பத்மஜா - 2ஏபி, சு.கார்த்திகன் - 2ஏசி, இமானுவேல் ஈஸ்வரன் தீபிகா - 2ஏபி, சி.சிவானுஜன் - 2ஏசி, ஜீ. கோகுலன் - 3பி

**கலைப்பிரிவு**
சி.லக்சிகா - 3ஏ, இ.வேணுஜன் - 3ஏ, க.சுபகா - 3ஏ, இ.தமிழ்வேந்தன் - ஏ 2பி, யோ.கமலக்கண்ணன் - ஏபிசி, மு.சர்மிலி - 3பி (ய-27)

## சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின்படி சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் விஞ்ஞானப் பிரிவில் மூவரும், கணிதப் பிரிவில் இருவரும், வர்த்தகப் பிரிவில் பன்னிரண்டு பேரும், கலைப்பிரிவில் இருபத்தியொரு பேரும் ஏனைய பிரிவுகளில் ஆறு மாணவர்களும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர். (ய-27)

## யா/ கச்சாய் மகாவித்தியாலயம்

**கலைப்பிரிவு**
கு.துசியந்தினி- 3ஏ, சு.சுபிதா - ஏபிசி, பா.வீஸ்ணுகி - ஏபிசி, க.அனுசிகா - 2பிசி, தெ.சோபிகா - பி2சி, மோ.சாதுஜன் - 2சிஎஸ் (ய-159)

## சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

**கணிதப்பிரிவு**
ஸ்ரீ.சாருஜன் - 2பிசி

**விஞ்ஞானப்பிரிவு**
ரா.சீபா - 2பிசி, உ.யதுர்சனா - 2சிஎஸ்

**வர்த்தகபிரிவு**
க.சினேகா - ஏ2பி, ச.பாணுஜன் - 2பிசி, சு.சோமினி - ஏ2சி

**கலைப்பிரிவு**
ஜெ.சாருப்பிரியன் - 2ஏபி, சு.கிளமெண்டமேரி - 3பி,பா.சுதர்சினிஏ2பி,கி.நிருபா2பிசி (ய-9)



கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின்படி முல்லைத்தீவு - உடையார் கட்டு மகாவித்தியாலய மாணவி நவரத்தின ராஜா தேனுஜா கலைப்பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்டநிலையில் முதலிடத்தைப் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். (ய-113-27)

## தென்மராட்சி கல்வி வலயத்தில் 30 மாணவர்கள் உயர்தரத்தில் சித்தி

சாவகச்சேரி, செப். 11

கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின்படி தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 30 மாணவர்கள் 3 பாடங்களிலும் ஏ தரச் சித்தியும் 25 மாணவர்கள் 2ஏபி சித்தியையும் பெற்றுள்ளனர்.

இதன்படி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 12 மாணவர்களும், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் 6 மாணவர்களும், வரணி மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆகியவற்றில் தலா 3 மாணவர்கள் வீதமும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நாவற்குழி மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தலா இரண்டு மாணவர்கள் வீதமும் கச்சாய் மகா வித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தலா ஒருவர் வீதமும் மூன்று பாடங்களிலும் ஏ தரச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 11 மாணவர்களும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் 10 மாணவர்களும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தலா ஒரு மாணவர் வீதம் மொத்தம் 25 மாணவர்கள் 2 ஏ பி தரச் சித்தி பெற்றுள்ளனர். (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கக் கொள்கைகள் நிலையானதாக வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



**கொழும்பு, செப்.11**

**அரசாங்கங்கள் மாறினாலும், கொள்கைகள் நிலையானதாக இருக்கவேண்டும். காலத்துக்குக் காலம் மாறும் கொள்கைகளால் ஒரு நாடு முன்னேற்றம் அடைய முடியாது.**

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற தேசிய மதிப்பீட்டுக் கொள்கை அறிமுக நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் செயற்றிறனான நிர்வாகத்தை உருவாக்குவதில் ஒரு முக்கியமான தருணத்தைக் குறிக்கும் வகையில், நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட தேசிய மதிப்பீட்டுக் கொள்கை நடைமுறை வரைவை வெளியிடும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது.

அரச கொள்கைகளின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தி, மூன்று மொழிகளிலும் இந்தப் புதிய கொள்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசியக் கொள்கை கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட குழுவுக்குப் பெரும் பொறுப்பு உள்ளது. இந்தக் கொள்கைகள் தொடர்ந்து செயற்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும் - என்றார். (எ-26)

# மீண்டும் சந்திரிகா



கொழும்பு, செப்.11

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உயர் பதவியொன்று வழங்கப்படவேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் உப தலைவர்களாலேயே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனவும், இதுதொடர்பில் ஆரம்ப கட்ட பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன எனவும் அறியமுடிகின்றது.

இந்த யோசனையை ஏற்க தற்போதைய கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும், அவர் சாதகமான நிலைப்பாட்டில் இருக்கின்றார் என்றும் தெரியவருகின்றது. (எ-44)

# மருத்துவர் பற்றாக்குறை சகஜமான விடயமே!

## கூறுகிறார் அமைச்சர் நிமால்



மருத்துவ நிபுணர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் பற்றாக்குறை என்பது இலங்கை மாத்திரம் முகம்கொடுக்கும் பிரச்சினையல்ல. இது முழு உலகமே எதிர்கொள்ளும் ஓர் உலகளாவிய நிகழ்வாகும்.

- இவ்வாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கையின்படி 2035ஆம் ஆண்டளவில் உலகளாவிய ரீதியில் 12.9 மில்லியன் மருத்துவ நிபுணர்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியம், நியூஸிலாந்து, கனடா, டென்மார்க், அவுஸ்திரேலியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற பெரும்பாலான நாடுகளும் மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளன. மருத்துவ நிபுணர்கள் இவ்வாறான நாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வது வழமையான நடைமுறையே - என்றார். (ச-இ)

# மரண அறிவித்தல்



30.09.1943 - 08.09.2023

## திரு. ம.ஜெறோம் பிராங்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கனகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ம. ஜெறோம் பிராங் அவர்கள் கடந்த (08.09.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை, விக்ரோறியா தம்பதிகளின் அன்பு மகனும், அக்நேஸ் மிரியம் றாஜினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்ரன் செல்லையா, ஜேட்ருட்டம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அவ்றினா ஜெறோமி, அனெஸ்ரா சிறோமி, டேரியஸ் மரியன், கிறிஸ்ரபெல் சர்மி, கிறேஷியன் மொறிஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், லியோஜொய்ஸ், பற்றிமாமெரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கொல்மன் பஸ்ரியன், பசில் றெஜினோல்ட், அன்ரனினா, அனெஸ்லி யோககுமாரன், ஜீன் ஜீவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் மேரிவிக்ரோறியா, பிரான்சிஸ் சந்திரா ஆகியோரின் மைத்துனரும் பிளேவியன், அஞ்சலிக்கா, எல்வியன், டானியலா, சியோனா, பிறயன் பிராங், ஸ்ரேவானி, சொவியா, தனிஜா, நற்றாலியா, ஷானியா, சுவர்ணியா, ஜோடன் ஆகியோரின் நேசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.09.2023) திங்கட்கிழமை நல்லாயன் வீதி சில்லாலை இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 3.00 மணிக்கு இல்லத்தில் இருந்து சில்லாலை கதிரை மாதா ஆலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, திருப்பலியின் பின்னர் சில்லாலை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**
**மகள் சிறோமி றெஜினோல்ட்**

(CS 26188)(k-1)

# கொரோனா உயிரிழப்பு மீண்டும் எழுந்த சர்ச்சை

கொரோனாத் தொற்றால் இறந்தவர்களில் எத்தனை பேரின் சடலங்கள் எரிக்கப்பட்டன என்ற தகவலை பல தடவைகள் கோரியபோதும் இதுவரை அந்தப் பட்டியல் வழங்கப்படவில்லை. சில விடயங்களை மூடி மறைப்பதற்கு முயற்சிக்கப்படுகிறது. அவற்றை வழங்காவிடின் சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தை நாடவேண்டிவரும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான 3ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தொற்றில் 16 ஆயிரம் பேர் மரணித்துள்ளனர். அவர்களில் எத்தனை பேரின் சடலங்கள் எரிக்கப்பட்டன என்ற தகவலை பல தடவைகள் கேட்டிருந்தேன். ஆனால் இதுவரை அந்தப் பட்டியலை வழங்கவில்லை. தற்போது ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்ச்சைக்குரிய பல தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. ஈஸ்டர் தாக்குதல் விவாதத்தில் ஆதாரங்களுடன் பல விடயங்களை நிரூபிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன் - என்றார். (ச-இ)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 29 . 03 . 1951 |  | 10 . 09 . 2023 |

## சுப்பிரமணியம் பாலசுந்தரம்

யாழ் நெடுந்தீவு மேற்கு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல 66/2, விசுவமடு மேற்கு, தொட்டியடியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்டிருந்த சுப்பிரமணியம் பாலசுந்தரம் (செயலாளர் - கிராம அபிவிருத்திச் சங்கம், முன்னாள் தலைவர் - விசுவமடு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், படித்த வாலிபர் குடியிருப்புத்திட்டத்தின் மூத்த உறுப்பினர் ) அவர்கள் நேற்று (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் வேலாசிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் மார்க்கண்டு தையல்நாயகி அவர்களின் மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் சுதர்சன் (கோபி இந்தியா), ராதிகா (ஆசிரியை, மு/பாரதி மகா வித்தியாலயம்), நிரோஜினி (லண்டன்), மீரா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேஸ்வரன், இலங்கேஸ்வரன், பிரசாத் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கமலம்மா (கனடா), தர்மரத்தினம் (விசுவமடு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுந்தரலிங்கம் (கனடா), கலாராணி (விசுவமடு), கனகேஸ்வரி, கருணாகரன் (ஆனந்தன் இந்தியா), லோகேஸ்வரி, சாந்தகுமாரி, சிவகுமாரி, சசிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கனிகா, டார்விஜன், டொமிகா, மகிஷா, அபினாஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2023) அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் விசுவமடு 12 ம் கட்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு
த.சஜீகரன் (பேரமகன்) 077 2938 944
சு. காண்டீபன் (மருமகன்) 077 6380 990
நிரோ (மகள்) 447985218673, மீரா (மகள்) 919566194352
கோபி (மகன் ) 919952988226, ராதிகா (மகள்) 077 6765 461

CR 40550 M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகின்றது. ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதிவரை கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை தொடர்பில் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தின் உள்ளடக்கங்களின் அமுலாக்கத்தின் முன்னேற்றம் குறித்து எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கு மேலதிகமாக இலங்கை தொடர்பில் தன் நிலைப்பாட்டை வோல்கர் டர்க் பதிவு செய்துள்ளார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொறுப்புக்கூறலில் இருந்து இலங்கை தொலைதூரத்தில் உள்ளது. இது நீண்டகால சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வரலாற்று மாற்றத்துக்கான ஏதுநிலையை சாத்தியமற்றதாக்கிக் கொண்டிருக்கின்றது இந்தக் கூட்டத்தொடரில், இலங்கை மீதான நிலைப்பாடாக, 'இலங்கை உண்மைகளை வெளிப்படுத்த வேண்டியது அவசியம். ஆனால் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை' என்ற விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுப்போரின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென ஐ.நா.மனித உரிமைகள் பேரவை கடந்த பல வருடங்களாக வலியுறுத்தி வருகிறது. ஆனால், இலங்கையில் பதவிக்குவந்த அரசாங்கங்கள் அதனைச் செய்யவில்லை. நாட்டில் ஏற்பட்ட குருதிக்களரிக்குத் தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நீண்டகாலமாக வலியுறுத்தியும் இலங்கைத் தலைவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இலங்கை அரசாங்கம் உறுதியளித்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் போதாமை காணப்படுகிறது. இந்தக் குழு தொடர்பில் எதுவித ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் அவதானிக்கப் படவில்லை.

அத்துடன், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் மேற்கொள்ளும் விசாரணைகளில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சாட்சியமளிப்பதை படையினரும் பொலிஸாரும் தடுத்து வருகின்றனர். நான்கு வருடங்கள் கடந்தும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சுயாதீனமான நம்பகத்தன்மையுள்ள விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதுதொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன - என்றுள்ளார். இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தொடர்ந்து தன் எதிர்ப்பை - அதிருப்தியைப் பதிவுசெய்து வருகின்றார். கடந்த இரு தினங்களுக்கு முன்னர்கூட அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையொன்றில் தன் நிலைப்பாட்டைப் பதிவு செய்திருந்தார்.

முன்னதாக, இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடும் எதிர்ப்பும், ஆதரவற்ற நிலையும் ஏற்பட்டதையடுத்து, தூதுக்குழுக்களை நாடுநாடாக அனுப்பி ஆதரவு தேடும் கைங்கரியத்தை இலங்கை கொள்கையளவில் கைவிட்டிருந்தது. பதிலாக, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியை வைத்து விடயங்களை அணுகுவது என்று கொள்கையளவில் முடிவெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மைத்திரிக்கு...

துள்ளது.

அடுத்துவரும் தேர்தல்களில் மைத்திரியையோ அல்லது அவர் தலைமை வழங்கும் கட்சியையோ கூட்டணியில் இணைத்துக்கொள்ளக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர், கட்சித் தலைவரிடம் வலியுறுத்தியுள்ளனர். மைத்திரியின் அரசியல் நிலைப்பாடுகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உள்ளிட்ட காரணிகளைக் கருத்திற்கொண்டே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கோரிக்கையைப் பரிசீலித்த கட்சித் தலைமை அதை ஏற்றுக்கொண்டுள்ளது. (அ-ம-44)

## 'சனல்-4'

தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் 'சனல் -4' வீடியோ தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரித்தானியாவின் 'சனல்- 4' வெளியிட்டுள்ள வீடியோவை முற்று முழுவதுமாக எம்மால் நிராகரித்துவிட முடியாது. இருப்பினும் இந்த வீடியோவை நூற்றுக்கு நூறு வீதம் உண்மை எனக் கூறவும் முடியாது. எனினும் 'சனல்- 4' வெளியிட்டுள்ள வீடியோ தொடர்பில் சுயாதீனமான, சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவே சிறந்தது. விசாரணை நடத்துமாறும், உண்மையை வெளிக்கொண்டுவருமாறும் இங்குள்ளவர்களுக்கு கூறினாலும் அது சரிவராது. மேலும் இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் வெற்றியடையவில்லை.

இதனை என்னால் உறுதிபடக்கூற முடியும். தற்போது ஐக்கிய நாடுகள் சபையும் 'சனல்- 4' வீடியோ தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்துமாறு கூறியுள்ளது. எனவே ஐக்கிய நாடுகள்சபைகூறுவதுபோன்று 'சனல்- 4' வெளிக்கொணர்வு தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொண்டால் சிறந்தது - என்றார். (அ-ம)

## புதிய....

கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். தயாசிறி ஜயசேகரவுக்கு ஆதரவு தெரிவித்து, அவரின் ஆதரவாளர்களால் குருநாகலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சியின் யாப்பு மறுசீரமைக்கப்பட்டு, [illegible] அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த எதேச்சாதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் எதையும் செய்யும் வகையில் ஏற்பாடு உள்ளது. அரசியல் உயர்பீடத்துக்கான நியமனம்கூட தலைவரால்தான் வழங்கப்படுகின்றது.

சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து என்னை நீக்கிவிட்டனர் எனக்கூறுகின்றனர். ஆனால் இது தொடர்பில் சட்டநடவடிக்கை எடுப்பேன். செல்ல வேண்டிய அனைத்து இடங்களுக்கும் செல்வேன்.

சுதந்திரக்கட்சியை விட்டு செல்லும் எண்ணம் இல்லை. சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்கு முற்படும் தரப்பின் முயற்சி நான் இருக்கும்வரை எடுபடாது. மாற்று கட்சிகளுக்கு செல்லும் எண்ணமும் இல்லை. என்னை தொடர்ச்சியாக சுதந்திரக்கட்சி நிராகரிக்குமானால் புதியதொரு கட்சியை ஆரம்பிப்பதைதவிர, மாற்றுவழி இருக்காது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சுப் பதவி தருவதாகக் கூறி என்னை பலமுறை அழைத்தார். அந்த அழைப்புகள் அனைத்தும் என்னால் நிராகரிக்கப்பட்டன. அடுத்த வாரம் விளையாட்டுத்துறை அமைச்சராக நான் பொறுப்பேற்கவுள்ளேன் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அவற்றில் எந்த உண்மையுமில்லை' - என்றார். (ம-44)

## விபத்தில்...

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் கடந்த நான்காம் திகதி இடம்பெற்ற விபத்தில் இந்த மூதாட்டி காயமடைந்தார். வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் மோட்டார்சைக்கிள் ஒன்றுடன் மோதுண்டு அவர் விபத்துக்குள்ளானார். மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## பாலம்....

வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பாலம் அமைக்கும் பட்சத்தில் இரு நாடுகளுக்குமிடையிலான போக்குவரத்து செலவினங்கள் வெகுவாகக் குறையும்.

தரைவழிப் பாதையூடாக தேவையான பொருள்களை எடுத்துவரவோ அனுப்பவோ முடியும். இது இரு நாட்டுப் பொருளாதாரத்துக்கும் நன்மையளிக்கும் விடயம்.

இதேபோல் ஏனைய நாடுகளுடனும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை செய்து கொள்ள ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் நடத்தப்பட்டால் நாடு 18 மாதங்களுக்கு முன்னர் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியை விட மோசமான நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும். நாங்கள் பதினாறு தடவை சர்வதேச நாணய நிதியத்தை அணுகியுள்ளோம். ஒவ்வொரு தடவையும் தேர்தல் வந்த படியால் அந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாட்டில் உறுதித்தன்மை அவசியம்.

ஜனநாயக நாடொன்றில் உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென சிலர் பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர். சர்வதேச பொருளாதார நடவடிக்கைகள் தேர்தலை மையமாக வைத்து தீர்மானிக்கப்படுவதில்லை. அடுத்த வருடம் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் கைவிடப்படலாம்.

இப்போது எமக்கு கிடைத்திருப்பவற்றை இழந்தால் நாம் முன்பு இருந்ததை விட மோசமான நிலைக்குத்தள்ளப்படுவோம்.

இன்னொரு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும். பல்வேறு காரணிகள் இந்த நெருக்கடியில் தாக்கம் செலுத்தும். அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் வேலைகள் தற்போது விமர்சனங்களின் மத்தியில் இடம்பெற்று வருகின்றன. இவை துரிதகதியில் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார். (அ-ம)

## திடீரென....

பல பெறுமதியான மரங்கள் தீப்பரவல் காரணமாக எரிந்தழிந்தன.

விஷமிகளின் விரும்பத் தகாத செயலால்தான் இந்தத் தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இதையடுத்து கரைச்சி பிரதேசசபையின் தீயணைப்புப் பிரிவினருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து விரைந்து செயற்பட்ட தீயணைப்புப் படையினர் தீப்பரவலைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ -ம-113)

## போதைப்பாக்கு...

பக்தர்களால் எச்சரிக்கப்பட்டு விரட்டப்பட்டார். நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் உள்ள ஆலயம் ஒன்றின் மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது. குறித்த மஹோற்சவத்துக்கு வருகைதந்த குருக்கள் மதுபோதையில் ஆலயத்துக்குள் சென்று பூஜை செய்ததுடன், அங்குள்ள மக்களுடனும் முரண்பட்டுள்ளார். குறித்த குருக்கள் மதுபோதையில் இருந்துள்ளதுடன், அவரிடம் இருந்து சாராயப் போத்தல் மற்றும் போதைப்பாக்கு என்பனவும் ஆலயப் பக்தர் களால் மீட்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஆலய பக்தர்கள் பிறிதொரு குருக்களை அழைத்து, அவரிடம் குறித்த குருக்களை ஒப்படைத்து ஆலயத்தில் இருந்து வெளியேற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் மாவட்ட அந்தணர் ஒன்றியம், மாவட்ட மற்றும் பிரதேச செயலக இந்து காலாசார உத்தியோகத்தர் ஆகியோரிடமும் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டவரை ஈர்க்கும் வகையில் சுகாதார சேவைகள் மாறவேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, செப்.11

**வெளிநாட்டு நோயாளர்களை நாட்டுக்கு ஈர்க்கும் வகையில் மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் சுகாதார சேவைகள் என்பவற்றை உயர்தரத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்த, முழுமையான சுகாதாரக் கொள்கை அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

ஜோசப் பிரேசர் மருத்துவமனையில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இவ்வாறான மருத்துவமனைகள் எதிர்காலத்தில் இலங்கையர்களுக்கு மட்டுமன்றி வெளிநாட்டவருக்கும் தேவையான சேவைகளை வழங்கமுடியும்.

இதன் வடிவமைப்பைப் பார்க்கும்போது, இது ஹோட்டலா?, மருத்துவமனையா? என்றுகேள்வி எழும். மருத்துவமனையின் சேவைகள் இவ்வாறு உயர்தரத்தில் காணப்படவேண்டும்.

இந்த நாட்டுக்கு வெளிநாட்டு நோயாளர்களை மருத்துவத் தேவைக்காக வரவழைப்பதற்கு மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் சுகாதார சேவைகள் என்பன உயர்தரத்தில் காணப்படவேண்டும்.

நாட்டில் மருத்துவமனைக் கட்டமைப்பு அரச மற்றும் தனியார் மருத்துவமனைகள் என பிளவுபட்டு காணப்படுகின்றன. பெருமளவான மருத்துவர்கள் நாட்டை விட்டுச் செல்கிறார்கள்.

திறந்த பொருளாதாரக் கட்டமைப் பின்கீழ் நாடு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அதனால் தனியார் நிறுவனங்களும் அபிவிருத்தி அடையலாம்.

அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டுக்கு முன்னேற்றம் கிட்டாது - என்றார். (எ-இ)



துன்னாலை சகாய மாத ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. (ம-100)


2 A பெற்றுத்தரப்படும்

English / Tamil Medium
Chemisty - Singam Master
077 665 5290
Bio - குருஜி PRN
074 099 9080

மணமகள் தேவை

1981 இல் பிறந்த யாழ்.இந்து கௌரவ குடும்ப கார்த்திகை நட்சத்திரம் (4 ஆம் பாதம்) உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
கல்வித் தகைமை: B.Sc, in Jaffna, M.Sc London, London PR தொழில் Business (London)
விவாகரத்துப்பெற்றவர்.
(எதிர்பார்ப்பு : A.L பூர்த்தி செய்ய மணமகள்)
தொடர்பு: 077 1107 624
(Viber, Whatsapp) 078 303 5181


# செல்வந்தர்களுக்கு சலுகைகள் வழங்கியதாலேயே வங்குரோத்து!

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



கொழும்பு, செப்.11

22 மில்லியன் மக்களின் நலனுக்காக அரசாங்கத் தரப்பு பாடுபடுகின்றது என்று கூறினாலும் பெரும் செல்வந்தர்களுக்கு அரச தரப்பு வரிச்சலுகை கொடுத்து 600 -700 பில்லியன் ரூபா அரச வருமானத்தை இழந்தமையே நாட்டின் தற்போதைய நிலைமைக்குக் காரணம் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுபீட்சத்தின் தொலைநோக்கு என்ற விஞ்ஞாபனத்தைக் கொண்டு வந்து நாட்டை வங்குரோத்தாக்கியவர்கள் இப்போது கவனமாகச் செயற்படுகின்றோம் என்கின்றனர். பெரும் பணக்காரர்களைப் பாதுகாத்து உழைக்கும் மக்களின் வயிற்றில் அடிக்கிறார்கள்.

அவர்களால் முன்மொழியப்பட்ட உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மக்களுக்கு எதிரானது. ஊழியர் சேமலாப நிதிக்கு பாதிப்பு ஏற்படாது எனக் கூறப்பட்டாலும் அது ஏமாற்று வேலை. உழைக்கும் மக்களிடையே பிரிவினையை உருவாக்கும் வரி முறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது - என்றார். (எ-இ)

### கோப்பாயில்...

கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அண்மித்ததாக, இராசபாதை சந்திக்கு அருகாக அதி சொகுசுப் பேருந்தும் மோட்டார்சைக்கிளும் நேருக்குநேர் மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் நின்ற மக்கள் சாரதியுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். சிலர் பேருந்தை சரமாரியாகத் தாக்கியுள்ளனர். நிலைமை கைமீறியதையடுத்து சிலர் பேருந்துக்குத் தீ வைக்கவும் முயன்றுள்ளனர். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். தடியடி நடத்தியதாகவும் தெரியவருகின்றது. தொடர்ந்து, பேருந்து கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டது. பேருந்தின் சாரதி கைதுசெய்யப்பட்டார். அத்துடன் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றத்துக்காக மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இறந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. விபத்துக்குள்ளான பேருந்தில் பயணித்தவர்கள் வேறு பேருந்துக்கு மாற்றப்பட்டு பயணத்தைத் தொடர்ந்தனர். (அ-ம-26,125,20)

### நிலநடுக்கத்தில்

உள்ள மராகெச் நகரில் அட்லெஸ் மலைப் பகுதிக்கு சில கிலோமீற்றர் தூரத்தில் இந்த நிலநடுக்கம் பதிவானது. அந்தப் பகுதி குடியிருப்புகள் மற்றும் விடுதிகள் நிறைந்த பகுதி என்பதால் இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அத்துடன் காயமடைந்தவர்களில் சுமார் 900 பேரின் நிலைமை கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (அ-ம)

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 04 . 1949



மறைவு 10 . 09 . 2023

## திருமதி இரத்தினசாமி நித்தியசெல்வம்

12, சிவன்பண்ணை வீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல. 82/3, நல்லூர்க் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசாமி நித்தியசெல்வம் நேற்று (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், இரத்தினசாமியின் (இளைப்பாறிய தபால் அதிபர்) அன்பு மனைவியும், Dr.வித்தியாவின் (யாழ். போதனா வைத்தியசாலை) பாசமிகு தாயாரும், Dr. உமைபாலனின் (கிளிநொச்சி பொது வைத்தியசாலை) பாசமிகு மாமியாரும், நித்தியராஜா, காலஞ்சென்ற நித்தியயோகன், நித்தியானந்தன், மருதஇரத்தினம், செல்வலலிதா, பத்மினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அக்ஷிதனின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2023) திங்கட்கிழமை இல.82/3, நல்லூர் குறுக்குத்தெரு நல்லூர், யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.82/3, நல்லூர் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs 52053) (N-1)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 ... news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org